# கம்பராமாயணத்தில் அகலிகை

2

முனைவர் பி .உஷா
இணைப்பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத்தலைவர்,
செயின்ட் ஜோசப்மகளிர் கல்லூரி,காங்கேயம் சாலை,திருப்பூர் -4

**ஆய்வு நோக்கம்**

கம்பராமாயணத்தில் உள்ள அகலிகை படலத்தில் காணப்படும் கருத்துக்கள் வாழ்வில் கற்பின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவனவாகத் தோன்றுகிறது.இக்கருத்துக்கள் பெண்களுக்குருய கற்பு ஒழுக்கத்தைக் கூறினாலும் இராமனுடைய இறைப்பணியை வெளிப்படுத்துவதற்காகவே படைக்கப்பட்டுள்ளதாகத்த தோன்றுகிறது. தற்காலத்தில் கற்பு நிலை எவ்வாறு சமுக்க்கண்ணோட்டத்தில் அமைந்துள்ளது என்பதை ஆராய்வதே நோக்கம் ஆகும்.

**ஆய்வுச்சுருக்கம்**

கம்பராமாயணத்திலும் இடை க்கால இலக்கியங்களிலும் அகலிகையின் செயல் சமயக்கண்க கொண்டு நோக்கப்படுவதாகத்தெரிகிறது. அதனால் அகலிகையின் செயல் இழிவாகக்கருதப்பட்டு அவள் சமுதாயத்தில் புறக்கணிக்கப்படுகிறாள்.

இக்காலக்கட்டத்தில் கௌதமர் குற்றவாளியாக்கப்பட்டு அகலிகையை க்காப்பாற்றும் போக்கு முனை ப்பாகத்தெ ரிகிறது.பழங்கால கற்புநிலை கேள்விக்குள்ளாக்கப்பட்டு புதிய விளக்கம் தரப்படுகிறது. கற்புப்பற்றிய சமயச்சிந்தனை மாற்றப்பெற்றும் சமுதாயச்சிந்தனைக்கு வழிவகுப்பதாகத் தெரிகிறது.

**முன்னுரை**

அகலிகை ஒவ்வொரு காலக்கட்டத்திலும் ஒவ்வொரு விதமாகப் பேசப்பட்டிருக்கிறாள் என்பதை அறிய முடிகிறது. அவ்வகையில் கம்பர் அவளைத் தமது இராமாயணத்தின் மூலம் உலகிற்கு எவ்வாறு காட்டுகிறார் என்பதை காணலாம்.

கௌதம முனிவரது மனைவியும் சனகப் பேரரசனுக்குப் புரோகிதனான சதானந்த முனிவனது தாயுமான அகலிகை தேவேந்திரனால் ஏமாற்றப்பட்டு அவளைக்கூடி பிறகு கௌதம முனிவின் சாபத்தினால் கல்லுருவமாகி இராமனது திருவடிப்பட்டவுடன் சாபம் நீங்கி இயற்கையான உருவத்தைப் பெற்ற வரலாற்றைக் கூறும் பகுதியாக அகலிகை படலம் அமைகிறது. அகலிகை என்னும் தமிழ்சொல் "அஹல்யா" என்னும் வடமொழிச்

சொல்லின் திரியாகும். இச்சொல்லுக்கு மிக்க அழகுடையவள் என்பது பொருள்.

**அகலிகை கிளைக்கதையின் நோக்கம்**

அகலிகை கதையானது கம்பராமாணயத்தின் கிளைக் கதைகளில் ஒன்றாகவே காணப்பட்டாலும் அது காப்பியத்திற்குப் பெருமை சேர்ப்பதாகவே காணப்படுகிறது.

"காப்பியத்தில் கிளைக்கதைகள் கருத்து விளக்கமாகவும் காப்பிய மாந்தரை நினைவு கூறவும், உயர்த்தவும், நீதி அறச் சமயக்கருத்துக்களைப் பழமரபுக்கதைகளின் வாயிலாக உணர்த்தவும் பயன்படுகின்றன. இவை துணைக்கதைகள், தனிக்கதைகள் என இருபிரிவாகப் பகுக்கப்படினும் காவியக் கட்டுக்கோப்பிற்குத் துணையாகவும் அமைந்து காப்பியத்திற்கு முழுமையளிக்கின்றன.

இவ்வகையில் "இராமாயணத் தலைவனான இராமனிடம் இறைமைக் காரணமாகவும் வில்வன்மைக் காரணமாகவும் மிகைப்பண்புகள் பொருந்துகின்றன. அவன் கைப்பட்டு உயர்ந்த விராதனும் கவுந்தனும் கால்பட்டு ஈடேறிய அகலிகையும் அவன் இறைவன்மையை வெளிப்படுத்துகின்றனர்." எனவே அகலிகை சாபம் நீங்குவதும் காப்பியத் தலைவனின் உயர்த்த பண்பை வெளிப்படுத்துவதற்காக ஆசிரியர் கையாண்ட உத்தியாகும் எனலாம்.

**அகலிகைப் படலத்தின் கிளைக்கதைகள்**

அகலிகை படலத்துள் அகலிகை சாபம் நீங்கலாக சித்தாச்சிரம வரலாறு, கங்கை வரலாறு, தாரைபோன்றோர் பற்றிய கிளைக்கதைகளும் அமைந்திருக்கின்றன. இதற்கான காரணத்தை நோக்கும்போது இவற்றுள் திதியின் தவம் பற்றிய கதையில் தோன்றும் இந்திரனுடைய செயல்பாடுகளிலிருந்து அவனுடைய குணவியல்பினை முன்னுணர்த்துவதற்கென்றே கம்பர் இக்கதையின் ஈண்டு வைக்கத் துணிந்தார் என்று எண்ணத் தோன்றும். எனவே அதனை மட்டும் இங்கு நோக்குவது நலம் பயக்கும்.

**திதியின் தவம்**

அயோத்தியிலிருந்து இராமன், இலக்குமணன், விசுவாமித்திரர் ஆகிய மூவரும் மிதிலை மாநகரத்தை நோக்கி நடந்து செல்கின்றனர். வழியில் கண்ட சோலை பற்றிக் கேட்ட இராமனுக்கே.

"இனைய சோலைமற் றயாதென வராகவன் வினவ
வினையெ லாமற தோற்றவன் விளம்புவான் மேனாள்
தனய ரானவர்க் கிரங்கியெ காசிபன் றனது
மனையு ளாடவம் புரிந்தன ளவளென வலிந்தான்" [1]

விசுவாமித்திரன் முன்னொரு காலத்தில் காசி முனிவனது மனைவியாகிய திதி என்பவன்

தனது குழந்தைகளான அசுரர்கள், தேவர்களால் அடிபட்டு மாண்டுபோனதால் இந்திரனைக் கொல்லும் வலிமையுடன் மூவுலகத்தையும் ஆளும் வல்லமையுடைய ஒரு புத்திரனை பெறுமாறு தன் கணவனிடம் அனுமதி கேட்டாள். அதற்கு அவர் "உன் வயிற்றில் ஒரு பலசாலியான புத்திரன் தோன்றுவான். அவனைத் தாங்கிய கருப்பத்துடன் பூவுலகிற்குச் சென்று ஆயிரம் ஆண்டுகள் தவம் செய்வாயாக" என்று பணித்தார். அவ்வாறே திதிதேவி பல்லாண்டுகள் அமர்ந்து தவம் செய்த இடமே இச்சோலை என்று விசுவாமித்திரர் இராமன் இலக்குமனரிடம் கூறுகிறார்.

திருமால் உறையும் பதியைச் சென்றடைந்தார் விஞ்சைமகள். அவள் துதிப்பாடலைக் கேட்டு மகிழ்ந்த மலர் மகள் அவ்விஞ்சையர் மகளுக்குத்தான் அணிந்திருந்த பூமாலையைப் பரிசாகக் கொடுத்து வரமும் அருளினார். மாலையைப் பெற்றுக் கொண்ட விஞ்சை மாது அதனைத் தன் வீணையில் கட்டிக்கொண்டு பிரமன் உலகை அடைந்தாள். அப்போது அங்கே இருந்த துருவாச முனிவர் விஞ்சையர் பெண்ணைக் கண்டார். அவள் திருமகளிடமிருந்து பூமாலை பெற்ற வகையை அறிந்து கொண்டாடினர். அவரும் மகிழ்ந்து அந்த மலர்மாலையைப் பெற்றுக்கொண்டு மகிழ்ந்தவராய் அமராவதி நகருக்கு வந்தார். அப்பொழுது தேவேந்திரன்.

"பொய்யு மாமுகில் வெள்ளியம் பிறங்கள் மீப்பிறழும்
செய்ய தாமரை யாயிர மலாந்துசெய் கதிரின்
மொய்ய சோதியை மலைச்சிய முறைமைபோன் றோளிரும்
மெய்யி னோடயி ராசவதக் களிற்றின் மேல் விளங்க" [2]

பவனி வந்து கொண்டிருந்தான். இந்திரனைக் கண்டதும் துருவாசர் தன்னிடமிருந்த மலர்மாலை அவனுக்கு கொடுத்தார். அவன் அதனை அலட்சியமாக அங்குசத்தால் வாங்கி ஐராவதத்தின் கழுத்தில் இட்டான். அந்த யானையோ உடனே அந்த மாலையை தும்பிக்கையால் இழுத்து நிலத்தில் இட்டு காலால் தேய்த்தது. துருவாசர் மாலையின் பெருமையை அறியாத இந்திரனுடைய அறிவின்மையையும் செருக்கையும் கண்டு அவனை நோக்கி

"இன்று நின்பெருஞ் செவ்விகண் டுவகையி னீத்த
மன்ற லந்தொடை யிகழ்ந்தனை நினதுமா நிதயும்
ஒன்ற லாதபல் வளங்களு முவரிபுக் கொளிப்பக்
குன்றி நீதுய ருறுகென வுரைத்தான் கொடியோன்" [3]

எனச் சாபம் இட்டார். அக்கணமே இந்திரனுக்குரிய காமதேனு கற்பக மரம் நவநிதியங்கள் யாவும் கடலில் மூழ்கி மறைந்து போயின. உலகம் எங்கும் வறுமை பரவிற்று. அதனால் தேவர்கள் அனைவரும் திருமாலிடம் சரணடைந்தார். இதனைக் கம்பர்

"வெய்ய மாமுனி வெகுளியால் விண்ணக முதலாத்
வைய மியாவையும் வறுமைநோய் நலிதர வானோர்
தையல் பாகனுஞ் சதுமுக்க் கடவுளுங் கூடிச்
செய்ய தாமரைத் திருமறு மார்பிளைச் சேர்ந்தார்" [4]

என்கிறார். கடலைக் கடையும் போது இந்திரனுடைய செல்வங்கள் யாவும் வெளிவந்தன. அவற்றின் பின்னா ஆலகாலவிஷம் இளம்பிறையும் பஞ்சதருக்களும் அவை போன்றுயர்ந்த வேறு பல பொருள்களும் தோன்றின. அதன் மேல் அக்கடலினின்றும் திருமகள் வந்தாள். கௌஸ்தவ மணி தோன்றியது. இந்நிலையில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் அமர்தத்தைப் பங்கிட்டு கொள்வதில் சண்டை ஏற்பட்டது. அப்போது திருமால் மோகினி வடிவம் கொண்டு அசுரர்களை அழித்தனர். பிறகு ஆலகாலவிஷத்தையும் இளம்பிறையினையும் சிவபெருமான் பெற்று முறையே தம் கண்டத்திலும் தலையிலும் தரித்துக் கொண்டார். கௌஸ்துவ மணியையும் திருமகளையும் திருமால் ஏற்று தம் மார்பினிடத்தே வைத்துக் கொண்டார். மற்றவைகளை இந்திரன் அடைந்தான்.

திதிதேவி தன்னைக் கொல்லும் வலிமைப்படைத்த புதல்வனைப் பெறுவதற்காகத் தவத்தில் இருந்ததை அறிந்த இந்திரன் மாற்றுருக் கொண்டு அங்கே வந்து அவளுக்கு பணிவிடை செய்யும் ஆளாக நின்றான். ஒருநாள் திதி அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். இந்திரன் அவள் வயிற்றுள் புகுந்து தன் வச்சிரபடையால் கருவை ஏழு கூறுகளாக்கினான். அதனை அறிந்து திதி வருந்தினாள். கண்ணீர் வடித்தாள். அவள் நிலைக்கு இரங்கி இந்திரன் அக்கூறுகள் ஏழு "சப்த மருந்துகள்" என்று பெயருடன் எங்கும் இரங்கி வர அருள் செய்தான்.

இக்கதையும் காப்பிய ஓட்டத்திற்குத் துணை செய்வதாக அமையவில்லை. காப்பிய மாந்தின் பண்பை விளக்குவதாகவும் இல்லை. மாறாக தவம் செய்வோரின் ஆற்றலை வெளிப்படுத்துவதாகவும் அஞ்சியோர்க்கு அபயம் அளிக்கும் அருளாணாகும் ஆண்டவனின் தன்மையினையும் வெளிப்படுத்துகிறது. ஆயினும் இதே வேளையில் ஆணவம் கொண்ட பிறரை அவமதிப்பவர் படும் அல்லலை இக்கதையால் கம்பர் புலப்படுத்துகிறார். தன் பெருமை தோன்ற ஐராவரத்தில் உலாவந்த இந்திரன் ஆணவத்தால் அனைத்துச் செல்வத்தையும் இழக்க நேரிட்டதை இக்கதை உணர்த்துகிறது. எனவே இந்திரனின் குணவியல்பு ஓரளவு வெளிப்படுகிறது.

காப்பிய ஓட்டத்திற்கும் காப்பியமாந்தரின் பண்பினை விளக்குவதற்கும் பயன்படவில்லையாயினும் சில அறங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. இக்கதை திதி பெண்ணாயினும் உறுதியாகப் பல்லாண்டு கடுந்தவம் புரிந்த செயல் பாராட்டிற்குரியது. அவள் எண்ணம் ஈடேறவில்லை. ஆயினும் அவள் உறுதி பிறரால் பின்பற்றத்தக்கதாகும். திதியின் எண்ணம் ஈடேறினால் தேவர்கள் அழிவர் என்பதை

ஐயமற அறிந்ததால் ஐராவதமுடையோன் சூழ்ச்சி செய்து திதியின் கருவைச் சிதைத்தான். சாபம்

"மீவியல்பாற்றலும் சமுதாய நம்பிக்கையும் இச்சாபத்தால் இணைகின்றன. காப்பிய நிகழ்வோட்டத்தில் சாபத்தின் செல்வாக்கையும் ஆசிரியர் காட்டிச் செல்கிறார். தெரிந்தோ தெரியாமலோ செய்த பிழை பிறிதொருவருக்கு உற்ற துன்பம் இவை ஏற்படுத்திய ஆற்றாமையும் வெகுளியும் சாபமாக வெளிப்படுகின்றன. பிறர்க்கு உறுத்திய துன்பம் தானும் உறும்நிலையில் இப்பிறப்பிலோ முற்பிறப்பிலோ இட்ட சாபம் காட்டுகின்றதையும் காப்பியம் காட்டுகின்றது. காப்பியக்கதை ஓட்டத்திற்கு இவை துணைபுரிவதாலும் சில நிகழ்வுகளுக்குக் காரணமாக அமைவதாலும் முதன்மை பெறும் கூறாக அமைகின்றது.

**அகலிகை - சாபந்தீர் படலம்**

விசுவாமித்திரர், இராமன், இலக்குவணன் ஆகிய மூவரும் மிதிலை நகரை நோக்கி வருகின்றனர். மிதிலைநகரின் மதிற்புறத்தே அகலிகையின் கல்லுருவத்தைக் காண்கின்றனர். அக்கல்லின் மேல் இராமனது காலடித் துளிப் பட்டவுடன் "உண்மைப் பொருளை உணர முயலும் ஆன்மா தான் கொண்ட மாயை நீங்கப்பெற்றது போல்" அகலிகை பண்டை வடிவம் பெறுகிறாள். இதனைக் கம்பர்

"கண்ட சுனடமிசைக் காகுத்தன் கழற்றுகள் கதுவ
உண்ட பேதைமை மயக்கற வேறுபட் டுருவம்
கொண்டு மெய்யுணா பயன்பால் கூடிய தொப்பப்
பண்டை வண்ணமாய் நின்றனன் மாமுனிப் பணிப்பான்" 5

என்றுரைக்கிறார். உள்ளத்தில் உள்ள அஞ்ஞான மயக்கம் நீங்கி மெய்ஞானம் பெற்றவன் போன்று அகலிகை தன் முன்னுருவம் பெற்றாள். அவளைக் கண்ட இராமன் அவளைப்பற்றி விசுவாமித்திரிடம் கேட்க அவர் "இப்போது சிலைவடிவம் நீங்கிப் பெண் உருவம் பெற்று நிற்கும் அகலிகை கௌதம முனிவன் பத்தினியாவாள். இவள் இந்திரன் செய்த தீவினை காரணமாக கல்லாகுமாறு முனிவரால் சபிக்கப்பட்டவள். இந்திரன் கண்ணாயிரமாகுமாறு சபிக்கப்பட்டான் என்று கூறுகிறார்.

இவ்வாறு விசுவாமித்திரர் அகலிகையின் சாபத்தைக் கூறக்கேட்ட இராமன்,

"முன்னைஊழ் வினையி னாலோ நமுவொன்று முடிந்ததுண்டோ
அன்னையே யனையாட் கிவ்வா றடுத்தவா றருளுகென்றான்" 6

பின்னர், அகலிகையைப் பார்த்தளவில் உலகத்தாய் போன்ற குற்றமற்றவள் போல்

காட்சியளிக்கும் இவளுக்கு இப்படிப்பட்ட நிலைமை ஏற்படக் காரணம் என்ன? அவள் இப்போது கல்லுருவம் பெற்றது முன்னோர் செய்த ஊழ்வினையா? அல்லது தற்போது ஏதும் நேர்ந்ததுண்டோ? இதற்கானக் காரணத்தைத் தெளிவாகக் கூறுக? என்று விசுவாமித்தரரிடம் கேட்கின்றான். அது கொண்டு விசுவாமித்திரர் அகலிகையின் சாப வரலாற்றை விரிவாகக் கூறலுற்றார்.

**அகலிகையின் சாப வரலாறு**

படைத்தற் கடவுளான பிரம்மன் முன்னர் படைத்த பெண்களின் அங்கங்களில் சிறந்ததை எல்லாம் ஒன்றாகச் சேர்த்து அழகு மிக்க ஒரு பெண்ணைப் படைத்தார். இந்திரன் தனக்குத் துணையாக இவளேயன்றி வேறொருத்தி அன்று என்று மனதிற் கர்வம் கொண்டு இருந்தான். கௌதம முனிவன் மனம் சபலப்படாமல் இருந்ததையும் அப்பெண்ணை அம்முனிவருக்கே தாரமாகக் கொடுத்தார். அதனால் இந்திரன் மனத்தில் பொறாமைக் கொண்டு அவளை அடைய நினைத்தான். கௌதம முனிவன் கோழி கூவி விட்டது என்று நினைத்து காலைக்கடன் முடிக்க எழுந்து சென்றுவிட்டார். இந்திரன் கௌதம முனிவர் வடிவம் கொண்டு ஆசிரமத்திற்குள் சென்றான்.

இந்திரன் வேற்றுருவம் கொண்ட அகலிகையுடன் சேர்ந்திருக்கும்போது அகலிகை தன்னுடன் இருப்பவன் இந்திரன் என்று அறிந்த பின்னும் அத்தீயச்செயல் தனக்குத் தகுதியானதன்று என்று ஆலோசித்து அதனை விட்டு விலகாமல் அக்கொடுஞ்செயலுக்கு தானும் உடன்பட்டு புதுமணத் தம்பதிகள் போல் இருந்தார்கள். அப்பொழுது மூன்று கண்களையுடைய கௌதம முனிவன் திரும்பி வந்து விட்டார். இந்நிகழ்ச்சியை

“புக்கவ ளோடும் காமப் புதுமண மதுவின்தேறல்
ஒக்கவுண் டிருந்த லோடு முணர்ந்தன இருப்பதத் தாழா
தக்கதன் றென்ன ஓராள் தாழ்ந்தளை இருப்பத் தாழா
முக்கணான் அனைய ஆற்றல் முனிவனும் முடுகி வந்தான்”[7]

என்று கம்பர் கூறுகிறார்.

கௌதமனைக் கண்டதும் இந்திரனால் வஞ்சிக்கப்பட்டோமே என்று அகலிகை நடுங்கி நின்றாள். இந்திரன் பூனை வடிவம் கொண்டு செல்ல முற்பட்டான். அகலிகை “நெஞ்சினால் பிழையில்லா நீர்மையள்” என்பது கம்பர் கருத்தாதலின் உண்மை வரலாற்றை உரைத்து அவளைப் பத்தினியாகவே காட்டுகின்றார். அகலிகை தன்னைப் புணர்ந்தவன் பிற ஆடவன் என்று தெரிந்தும் அத்தீயச்செயலை விலக்க வேண்டும் என்ற அறிவுத் தெளிவு பிறவாது இருந்ததே இவள்மீது குறை என்பதைக் கம்பர் அழகாகப் புலப்படுத்துகிறார். தன் கற்பை அழித்ததற்குத் தானே முதன்மைக் காரணமாக இருந்ததால் அகலிகை ஏசப்படுவதற்கு ஏற்றவளாவாள் என்று பிறர் சொல்லக்கூடும். ஆயினும் இந்திரன் சூழ்ச்சியைக் கண்டு கௌதமன்

"தீவிழி சிந்த நோக்கிச் செய்ததையுணர்ந்து செய்ய
தூயவ னவளை நின்கைச் சுடுசர மனைய சொல்லால்
ஆயிர மாதர்க் குள்ள வறிகுறி யுணக்குண்ட டடாகென்று
ஏயின னவையெ லாம்வந் தியைந்தன விமைப்பின் முன்னம்" [8]

என்று சாபம் இட்டார். அவர் சொன்ன இமைப்பொழுதில் அவைகள் எலலாம் இந்திரன் உடம்பில் வந்தடைந்தன. இந்திரனுக்குச் சாபம் அளித்த பின் அகலிகை நோக்கி,

"மெல்லிய லாளை நோக்கி விலைமக ளனைய நீயும்
மெல்லிய லாதி யென்றான் கருங்கலாய் மருங்கு வீழ்வாள்"

என்று சபிக்கின்றான். உண்மையில் அவள் குற்றமற்றவளாக இருந்திருப்பின் தானும் ஏமாற்றப்பட்டதைக் கூறி கதறியிருப்பாள். ஆனால் தன் செய்கைக்கு நாணி நிற்கிறாள். சாபத்தை அமைதியாக ஏற்றுக்கொண்டு சாப விமோசனம் கேட்கிறாள். கௌதமனும் சினம் தணிந்து,

"பிழைத்தது பொறுத்த லென்றும் பெரியவர் கடனே யென்பர்
அழற் றருங் கடவு ளன்னாய் முடிவிதற் கருளு கென்னத்
தழைத்துவண்டிமிருந் தண்டார்த் தசரத ராம னென்பான்
கழற்றுகள் கதுவ விந்தக் கல்லுருத் தவிர்தி யென்றான்" [9]

எனவே அகலிகையே தான் செய்த தவற்றை ஏற்றுக்கொள்கின்றாள் என்பது தெளிவு. சிறியோர் செய்த பிழையைப் பெரியோர் பொறுத்து அருள்வதுபோல் எனக்கு சாப விமோசனம் அருள வேண்டும் என்று கேட்டாள். அதற்குக் கௌதமர் தசரதகுமாரன் பாதத்துளி பட்டவுடன் அவள் தன் கல்லுருவம் நீங்கிப் பெண் உருவம் அடைவாள் என்று கூறினார்.

இந்திரனுக்காகப் பிரம்மதேவர்கள் வேண்ட அவனுக்கிட்ட சாபத்தைக் கௌதம முனிவர் மாற்றி ஆயிரம் கண்களாகும்படி செய்தார்.

இவ்வாறு இராமன் கால்பட்டு அகலிகை உயிர்பெற்றதையும் முன்பு அவன் இராட்சசியோடு போரிட்டு வென்றதையும் நினைவு கூர்ந்த விசுவாமித்திர முனிவர்.

"இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ண மினியிந்த வுலகுக் கெல்லாம்
உய்வண்ண மன்றி மற்றோர் துயர்வண்ண முறுவதுண்டோ
மைவண்ணத் தரக்கி போரின் மழைவண்ணத் தண்ணலேயுன்
கைவண்ண மங்குக் கண்டேன் கால் வண்ண மிங்குக் கண்டேன்." [10]

என்று இராமனை மனமாரப் பாராட்டினார். பின்னர் இராமன் அகலிகையை வணங்கி அவளை அன்னை என்று அழைக்கின்றான். இதனைக் கம்பர்

"கேது இலா குணத்தான் சொன்ன பொருளெலா மனத்திற்கு கொண்டு பொன் அடி வணங்கிப் போனான்".[11]

என்றுரைக்கிறார். அகலிகையைப் பற்றிய உண்மைகளை விசுவாமித்தர முனிவர் மூலம் நன்கறிந்து கொண்ட நிலையில்தான் இராமன் அவனை "அன்னையே" என்றழைத்ததோடு நில்லாமல் அவளுடைய திருப்பாதங்களே வணங்கிச் சென்றான் என்று மேற்கண்ட பாடல் மூலம் கூறுகிறார் கம்பர் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

இவ்வாறு சுய உருப்பெற்ற அகலிகையுடன் இராமன் இலக்குமணன் விசுவாமித்திரர் ஆகிய மூவரும் கௌதமரை அடைந்தனர். அம்முனிவர் அவர்களுக்கு விருந்து உபச்சாரம் செய்தார். பின்பு அகலிகையை ஏற்குமாறு கௌதமனிடம் விசுவாமித்திரர் கூறினார்.

"அஞ்சன வண்ணத் தான்ற னடித்துகள் கதுவா முன்னம்
வஞ்சிபோ லிடையாண் வண்ணத்த ளாகி நின்றாள்
நெஞ்சினாற் பிழைப்பிலாளை நீ யழைத் திடுக வென்னக்
கஞ்சமா முனிவ னன்ன முனிவனுங் கருத்துட் கொண்டான்".[12]

அங்கனவே கௌதமரும் அகலிகையை ஏற்றுக் கொண்டார். "அறிவு நீங்கி அறம் பிழைத்த ஆண்மகனது வஞ்சமே" இந்த அகலிகை தன் பெண்மை நெறி தவறியதற்குக் காரணம் என்ற உண்மை புலபட வேண்டும்.

அகலிகையைக் கௌதமரிடம் சேர்த்த பின்பு மூவரும் வணங்கி அந்தச் சோலையை விட்டு நடந்து மிதிலை நகரின் மதிலைக்கண்டனர்.

**மூலக்கதையுடன் தொடர்பு**

அகலிகை கிளைக்கதையால் இராமனுடைய சிறப்பு வெளிப்படுகிறது. தன் பாதமலரை பற்றுக்கோடாகக் கொண்டார். பாவங்கள் அகற்றி அருள்புரிபவன் பரமன். அப்பரமன் அவதாரம் இராமன் என்பதை வெளிப்படுத்த இக்கதையைக் கம்பர் எடுத்தாண்டுள்ளார். இராமனுடைய திருவடி பட்ட அளவில் பண்ணிய பாவங்கள் நீங்கினதெனில் அவன் பாதத்தைப் பணிந்தவர் பெரும் பேறடைவர் என்பதாம். பூதநாயகன் வேதநாயகன் என்றெல்லாம் போற்றப்படும் இராமனுடைய தோற்றத்தால் மண்ணுலகும் விண்ணுலகும் உய்தி அடையும். சோதியான அவன் துன்பம் அகற்றுபவன் அறவழி நடப்போர் துயரும் தீரும் என்பதை விசுவாமித்திரர் கூறுகின்றார். கால்வண்ணம் இங்கு கண்டேன் என்பதென்ன ?

இறைவனின் "மாணடிச் சேர்ந்தார் நிலமிசை நீடுவாழ்வார்" என்றார். பற்றுகளற்ற பரந்தாமனின் தாள்களைப் பற்றியவரின் பற்றுக்களும் நீங்கும். அவன் அருளால் ஆணவம் கர்மம் மாயை நீங்கப் பெற்றுப் பெருவாழ்வடைவர். பண்ணிய பாவங்கள் மறைய

புண்ணியம் சேரும். எளியார்க்கு இரங்கும் வள்ளல் இறைவன். இத்தகைய இறைவனுடைய அவதாரமான இராமனுடைய அருட்செயலைக் கூறும் முனிவன் அல்லோரை அழித்து நல்லோரை நயந்த செயலையே ”கைவண்ணம் கால்வண்ணம்” என்று சிறப்பித்தான்.

**கதையின் தன்மை**

இழிச்செயல் புரிந்த இந்திரன் பழிபூண்டான். சாபம் பெற்றான். தன்னைப் புணர்ந்தவன் தன் கணவனல்லன் இந்திரனே என்தை உணர்ந்தாள் அகலிகை ”உணர்ந்த பின்னும் தக்கதன்று எண்ணத் தேராள் தாழ்ந்தனள் இருந்தாள்”. கௌதமன் வடிவுடன் இருந்த இந்திரனை முதலில் ஐயுறவில்லை. கணவனல்லன் என்பதை உணர்ந்தாள் – காலம் கடந்த பின் உணர்ந்தாள். தவறு நடந்து விட்டது. இனி செய்யத்தக்கது ஒன்றுமில்லை என்ற நிலையில்தான் வாளாவிருந்தாள். வருமுன் காக்க வேண்டும். வந்த பின் பெரும் போரட்டத்தில் வெற்றி காணலாம். ஆனால் அகலிகையின் நிலை வந்தபின் காக்க முடியாத நிலையாக அமைந்துவிட்டது. அவளாக தவறு இழைக்கவில்லை. தவறு செய்ய எண்ணவும் இல்லை. இந்திரன் தவறுக்கு உடந்தையானாள் என்றுகூடச் சொல்ல முடியாது. உணர்ந்து கொள்ளாத நிலையில் தவறு நடந்து விட்டது. எவ்வாறாயினும் தவறு தவறுதானே ? முனிவன் சாபம் பெற்றுக் கல்லானாள். கல்லுரு நீத்தபின் கரிய செம்மல் மாதவன் அருள் உண்டாக வழிபாடு படர் உறாதே போதி நீ அன்னை என்று கூறி அனுப்பினாள்.

”இணரெரி தோய்வன்ன இன்னா செய்தான் இந்திரன் குணமென்னும் குன்றேறி” நின்ற கௌதமன் வெகுண்டான். சீற்றத்தால் சாபமிட்டாள். சான்றோர் கொள்ளும் சினம் விரைவில் மறைந்து விடுமன்றோ மறைந்த பின் இந்திரனை மன்னித்தான். இந்திரன் இழைத்த தீமை சொல்லமுடியாத அளவிற்கு ஆயினும் முனிவு ஆறிய முனிவன் அவனை மன்னித்தான். அடாச்செயல் புரிந்த அமரர்கோன் ஆயிரம் கண்ணுடையனானான்.

கௌதமன் தவறுக்கு உடந்தையான தன் மனைவியையும் தண்டித்தான் – கல்லாக்கினான். தவற்றிற்குக் காரணமான இந்திரன் விரைவில் சாபம் நீக்கப்பெற்றான். அகலிகை நீண்ட நாட்களுக்குப்பின் சாபம் நீக்கம் பெறுகிறாள். அதுவும் இராமன் பாதத்துளிப்பட்ட பின்னர் தவற்றிற்குத் துணைக்காரணமானவளுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனை தவறுக்குக் காரணமானவனுக்குக் கொடுக்கப்பட்டதினும் பெரிது. தவற்றிற்குக் காரணமானவன் சாதாரணமானவனல்லன் தேவர்கோன் உயர்ந்தோர் இழிசெயல் செய்யின் உலகம் தாங்குமோ ? உயர்ந்தவனுக்கு அல்லவா? தண்டனை மிகுதியாகக் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் இங்கு அகலிகையே அதிகத் தண்டனைக்கு ஆளானாள். தேவர்கள் தவறு செய்வது புதிதில்லை. குலமகள் – முனிவன் மனைவி தவறு

செய்தல் இயல்பிற்கு மாறானது. தவறென உயர்ந்த பின்னும் தாழ்ந்திருந்தால் தண்டனை மிகுதியாயிற்று. அறியாமல் பிழைசெய்வோர் உலகில் உள்ளார். ஆனால் பிழையென அறிந்தவுடன் திருத்த வேண்டும். உணர்ந்த பின்னும் திருந்தாநிலை பழித்தற்குரியது என்ற கருத்தைக் கம்பர் நுட்பமாக விளக்குகிறார்.

**முடிவுரை**

தேவர்கள் தவறு செய்வது புதிதில்லை. நான்முகன் அவைக்குக் கங்கை வந்தபோது தவறு செய்த வருணன் பூமியில் குருகுலத்தில் சாந்தனுவாகத் தோன்றும் நிலை ஏற்பட்டதை வில்லியார் காட்டியுள்ளார். மனைமாட்சி நீங்கப்பெற்றதால் அகலிகை கல்லானாள். சாபம் நீக்கியபின் இராமன் அவளை நோக்கி கணவன் அருளைப்பெற வழிபடுமாறு வழிகாட்டியது அவள் செய்த தவற்றினைச் சுட்டிக்காட்டுவதாக உள்ளது. இவ்வாறு கம்பராமாயணத்தில் அகலிகை விமர்ச்சிக்கப்படுகிறாள்.

**அடிக்குறிப்புகள்**

1. கம்பராமாயணம், பாலகாண்டம், அகலிகைப்படலம், பா. 479.
2. கம்பராமாயணம், பாலகாண்டம், அகலிகைப்படலம், பா. 485.
3. மேலது., பா. 493.
4. கம்பராமாயணம், பாலகாண்டம், அகலிகைப்படலம், பா. 495.
5. மு. நிலாமணி, கம்பராமாயணக் கிளைக்கதைகள், ப. 28.
6. கம்பராமாயணம், பாலகாண்டம், அகலிகைப்படலம், பா. 549.
7. கம்பராமாயணம், பாலகாண்டம், அகலிகைப்படலம், பா. 384.
8. மேலது., பா. 556.
9. கம்பராமாயணம், பாலகாண்டம், அகலிகைப்படலம், பா. 588.
10. மேலது., பா. 559.
11. மேலது., பா. 561.
12. வெ. சுப்பிரமணிய முதலியார், அகலிகை வெண்பா, பா.25.
13. வெ. சுப்பிரமணிய முதலியார், அகலிகை வெண்பா, பா.45.

**துணை நூற்பட்டியல்**

1.கம்பராமாயணம்- பாலகாண்டம்- அகலிகைப்படலம்

2.சுப்பிரமணிய முதலியார் - அகலிகை வெண்பா